[1989 அக்டோபர் 31

துவரங்குறிச்சியில் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி மையம்.

* 3213 **பேராசிரியர் க. பொன்னுசாமி :**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மருங்காபுரி தொகுதியைச் சேர்ந்த துவரங்குறிச்சியில் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி மையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(9-30)

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு மாற்று ஏற்பாடாக ஏதாவது செய்வதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சிக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அதிக முக்கியத்துவம் கொடுத்து கோவை, விருத்தாசலம், திண்டிவனம், ஆழியார் நகர் மற்றும் வேப்பங்குளம் ஆகிய ஆராய்ச்சி மையங்கள் செம்மையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆராய்ச்சியின் பயன்களை துவரங்குறிச்சியும் பெறலாம்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இடங்களைப் போலவே திருச்சி மாவட்டத்தின் தென் பகுதியிலும் எண்ணெய் வித்துக்கள் மிக அதிகமான அளவில் உற்பத்திச் செய்யப்படுகின்றன. ஆகவே, அங்கே இருக்கின்ற விவசாயிகள் பயன்பெறும் வகையிலும், அறிவுபூர்வமாக அவர்கள் செயல்படுகின்ற வகையிலும் இந்த திட்டத்தினை அங்கேயும் விஸ்தரிக்கின்ற எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

1989 அக்டோபர் 31]

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிப் பற்றாக்குறையின் காரணமாக தற்போது ஆரம்பிப்பதற்கு இல்லை.

தாயகம் திரும்பியோர் மறுவாழ்வுத் திட்டங்கள்.

*2132 **திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :**

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தாயகம் திரும்பியோர் மறுவாழ்வுத் திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டும், குறுக்கப்பட்டும் விட்டன என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அவற்றை முனைப்புடன் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயகம் திரும்பியோர் மறுவாழ்வுக்காக இருக்கின்ற திட்டங்களிலோ அல்லது வேறு பல நல்ல நலத் திட்டங்களிலோ மாற்றங்களோ அல்லது குறைக்கப்படவோ இல்லை என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். அதோடு தாயகம் திரும்பியோர்களிலும், மலைத் தோட்டங்களிலும் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். வணிகம் செய்வதற்கு வங்கிக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது, வீடுகள் கட்டிக்கொள்வதற்கு வங்கிக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்தத் திட்டங்கள் எல்லாம் நடைமுறையில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே தாயகம் திரும்பியோர் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் எந்தவிதமான மாற்றமும் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நீலகிரி மலையில் வாழ்கின்ற அவர்கள் மிகவும் கஷ்டமான நிலையில் தங்களுடைய வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்கியிருக்கக்கூடிய குடியிருப்புகள் மிகவும் மோசமான நிலையில் இருப்பதாக அடிக்கடி புகார்கள்